# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1486/2022 P.W.10

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | தேவகி | க-பெ | சேதுராமன் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 44/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | காவல் ஆய்வாளர், குழந்தைகள் கடத்தல் தடுப்பு பிரிவு, சிவகங்கை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.08.2026

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து காவல் ஆய்வாளராக குழந்தைகள் கடத்தல் தடுப்பு பிரிவில் பணி செய்து வருகிறேன். நான் கடந்த 16.07.2021 அன்று குன்றக்குடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது சார்பு ஆய்வாளர் சண்முகம் என்பவர் பதிவு செய்திருந்த குற்ற எண்.110/2021 இதச பிரிவு 304(A) ன் வழக்கு கோப்பினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அன்றைய தினமே வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடமான திருச்சி - ராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு எதிரே உள்ள சம்பவயிடத்தினை காலை 8.00 மணிக்கு சாட்சிகள் கலைதுறை மற்றும் குமார்ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர்ஆகியவை தயார் செய்தேன். **மாதிரி வரைடபம் அ.சா.ஆ.6,** பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் இறந்து போன மணிமாறன் என்பவரின் உடலை மதுரை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணைசெய்து பிரரே பரிசோதனைக்கு ஆஜர்படுத்தினேன். இவ்வழக்கில் எதிரி விஜய் என்பவரை 20.17.2021 அன்று காலை 10.00 மணிக்கு குன்றக்குடி காவல் நிலையம் முன்பு வைத்து காரணம் கூறி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி ஓட்டி வந்த TN 49 BR 6504 TATA Thago Car மற்றும் இறந்தவர் ஓட்டி வந்த TN 63 AB 5339 பஜாஜ் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தை வாகன ஆய்வுக்கு உட்படுத்தி வாகன ஆய்வு சான்று பெற்றேன். **மோட்டார் வாகன ஆய்வு சான்றுகள் முறையே அ.சா.ஆ.7 மற்றும் 8.** மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஆனந்த என்பவரை விசாரணை செய்து அவரது வாக்குமூலத்தையும் பதிவு

செய்தேன். பின்னர் வழக்கில் பிரேத பரிசோதனை சான்று பெற்று மருத்துவர் திருமதி.தேவி பியான்ஷா என்பவரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் சண்முகம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் குற்ற சம்பவம் உண்மை என்று தெரியவந்ததால் எதிரி மீது 13.08.2021 அன்று மேற் சொன்ன பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

முதல் தகவல் அறிக்கை எப்போது பதிவு செய்யப்பட்டது என்றால் 16.07.2021. அ.சா.1 கொடுத்த புகாரை யார் எழுதியது என்றால் தெரியாது. புகாரில் அ.சா.1 ன் மகன் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சாட்சி கையொப்பம் யாரும் இடவில்லை. அ.சா.1 நீதிமன்ற குறுக்கு விசாரணையில் புகார் யார் எழுதியது என்று கேட்ட போது அங்கு உள்ள போலீசார் தான் எழுதினார்கள் என்று சொன்னால் தவறு. முதல் தகவல் அறிக்கை 16.07.2021 பதிவு செய்யப்பட்டு 30.07.2021 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது மேற்படி காலதாமதத்திற்கு காரணம் என்ன என்றால் அது பற்றி குறிப்பிடவில்லை. குன்றக்குடி காவல் நிலையத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையே உள்ள தொலைவு என்ன என்றால் சுமார் 18 கி.மீ இருக்கும். இந்த வழக்கில் சம்மந்தமப்பட்ட சாட்சிகளில் சார்பு ஆய்வாளர் தவிர மற்ற சாட்சிகள் யாரையும் அவர்அவர் இருப்பிடத்திற்கு சென்று விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் அனைவரும் காவல் நிலையத்திற்கு வரவழைத்து விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.8 ல் காரின் முன்பக்க இடது புறத்தில் தான் சேதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள காரில் எந்த பக்கம் சேதம் ஏற்பட்டுள்ளது என்றால் முன் பக்கம் சேதம் ஏற்பட்டுள்ளது. என்னுடைய விசாரணையில் இறந்து போன மணிமாறன் தனது இரண்டு சக்கர வாகனத்தில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி இடது புறம் திரும்பும் போது விபத்து ஏற்பட்டுள்ளதுஎன்றால் சரிதான். எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியை காவல்நிலையத்திற்கு வரவழைத்து காவல் நிலையத்தில் வைத்து கைது செய்தோம் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் சாட்சிகளை சரியான முறையில் புலன் விசாரணை செய்யாமல் எதிரிமீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.13 17:43:24 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.